# பிரித்தாளும் தந்திரமும் - ஒற்றையாட்சி முறையும்

## பகுதி II

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

1

1833-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி கோல்புறூக் கமரன் திட்டப்படி கொழும்பை மையமாகக் கொண்ட ஒற்றையாட்சி முறையை பிரித்தானிய அரசு அமுல்படுத்தியது சட்டவிரோதமான ஒரு நடவடிக்கையாகும்.

பிரித்தானிய அரசுக்கு இலங்கை மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமை, நாடு பிடிக்கும் யுத்தத்தில் ஒல்லாந்தரை வெற்றி கொண்டதன் மூலமும் கண்டிய மன்னன் சிறீவிக்கிரமராஜ சிங்கனை வெற்றி கொண்டதன் மூலமும் வன்னி மன்னன் பண்டாரவன்னியனை வெற்றி கொண்டதன் மூலமும் கிடைத்தது என்பதைத் தவிர இலங்கை மக்களால் வழங்கப்பட்ட ஒன்றல்ல.

பரந்துபட்ட மக்களுக்கு வாக்குரிமையோ கருத்துக்கூறும் உரிமையோ வழங்கப்படாத நிலையில் லண்டனிலிருந்து சென்ற கோல்புறூக், கமரன் ஆணைக்குழுவினர் இலங்கை மக்களின் கருத்தைக் கேட்டறிந்து அவர்கள் விருப்பப்படியே அரசியல் சீர் திருத்தத்தை மேற்கொள்ள ஒற்றையாட்சி முறையை சிபார்சு செய்தனர் என்பது அப்பட்டமான பொய்யாகும்.

கோல்புறூக் ஆணைக்குழு இலங்கை மக்களுக்கு எத்தகைய ஆட்சி முறையை பரிந்துரை செய்யலாம் என்பதற்காக அங்கு அனுப்பப்பட்டது என்பதை விட பிரித்தானிய காலனிய அரசின் நலன்களுக்கு அங்கு எத்தகைய ஆட்சிமுறையை அமுல்படுத்தினால் பொருத்தமாக இருக்கும் என்பதைக் கண்டறிய அங்கு அனுப்பப்பட்டது என்பதே உண்மையாகும்.

இலங்கையில் மூன்று அரசுகள் இருந்த போதிலும், 1833-ம் ஆண்டு புதிதாக அமைக்கப்படவுள்ள சட்ட நிரூபண சபையில் அரசுகளுக்கான பிரதிநிதித்துவம் என்றில்லாமல் இனங்களுக்குரிய பிரதிநிதித்துவம் என்ற அடிப்படையில் தமிழருக்கு ஒரு பிரதிநிதித்துவமும், சிங்களவர்களுக்கு ஒரு பிரதிநிதித்துவமும், வழங்கும்படி கோல்புறூக் ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது. இதனை சிங்களவர்களுக்கு சமமாக தமிழர்களை அங்கீகரித்த நடவடிக்கை என்று சொல்லமுடியாது.

கண்டிய சிங்களவர்களுக்கும், கரையோரச் சிங்களவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டை வளர்த்து வருவதற்காக அதாவது கரையோரச் சிங்களவர்களையும், தமிழர்களையும் சமப்படுத்துவதன் மூலம் கண்டியச் சிங்களவர்களை ஓரங்கட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்றே இது கருதப்படுகின்றது. கரையோரச் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்ட பிரதிநிதித்துவம் கூட கிறிஸ்தவராக மதம் மாறிய சிங்களவருக்குத்தான் வழங்கப்பட்டதே தவிர, பௌத்த சிங்களவர் ஒருவருக்கும் அது வழங்கப்படவில்லை என்பது முக்கியமான ஒரு விடயமாகும். அது போல், முதல் முதலாக பிரித்தானியர்களால் சேர் (Sir) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இலங்கையர் ஒரு தமிழர் என்பதும் (சேர். முத்துக்குமாரசாமி) கவனத்துக்குரிய ஒன்றாகும்.

கண்டியச் சிங்களவர்கள் பௌத்த தர்மத்தினதும், 'சங்க' வினதும் காவலர்களாக தங்களைக் கருதிக்கொண்ட போதிலும், தொடக்க காலத்தில் அவர்கள் வன்னி, யாழ்ப்பாணம், மற்றும் தமிழகத்திலுள்ள தமிழர்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். குறிப்பாக ஒல்லாந்தர் காலத்திலிருந்து தஞ்சைநாயக்க மன்னர்களுடனும் மற்றைய தமிழகக் குறு நில மன்னர்களுடனும் அவர்களுக்கிருந்த தொடர்பு ஆங்கிலேயருக்கு ஆபத்தான ஒன்றாகவே இருந்தது.

அதாவது இலங்கையிலிருந்த யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை இராச்சியங்களை ஒன்றாக இணைத்து CEYLON என்ற ஒற்றையாட்சி அரசை உருவாக்கியது போல், இந்தியப் பெருநிலப்பரப்பிலிருந்த பல நூறு சிற்றரசுகள் சமஸ்தானங்கள், எல்லாவற்றையும் வென்றடக்கி பல்வேறு தேசிய இனங்கள், மற்றும் இனக்குழுக்களை எல்லாம் அவற்றின் விருப்பத்திற்குமாறாக ஒன்றாக இணைத்து இந்தியா என்ற சிறைக் கூடத்துக்குள் அடைத்து 'இந்திய அரசு' என்ற ஒன்றையும் ஆங்கிலேயர்கள் உருவாக்கியிருந்தனர்.

அவர்கள் நினைத்திருந்தால் இந்திய நிலப்பரப்பின் கீழ் தொங்கிக் கொண்டிருக்கும் சின்னஞ் சிறு தீவான இலங்கையையும் இந்தியா என்ற அலகுக்குள் ஒன்றாக இணைத்திருக்க முடியும். கண்டி இராச்சியம் கைப்பற்றப்படுவதற்கு முன்பு பிரித்தானிய நிர்வாகத்தின் கீழிருந்த யாழ்ப்பாணமும், கரையோரச் சிங்களப் பகுதிகளும் சென்னையைத் தலைநகராகக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பனி நிர்வாகத்தின் கீழேயே இருந்தது. அவர்கள் நினைத்திருந்தால் அதே நிர்வாக அலகை தொடர்ந்து அமுல்படுத்தி வந்திருக்கமுடியும்.

ஆனால் 1815-ல் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டு இலங்கை முழுவதும் தங்கள் ஆட்சியின் கீழ் வந்ததும், ஆங்கிலேயர்கள் அதைச் செய்ய விரும்பவில்லை. அதற்குக் காரணம், இலங்கை மக்கள் மீது கொண்ட நல்லெண்ணமல்ல. அவர்களது வரலாற்றுப் பாரம்பரியத்தை மதிக்கும் பெரும் தன்மையுமல்ல.

> கண்டியச் சிங்களவர்கள் பௌத்த தர்மத்தினதும், 'சங்க' வினதும் காவலர்களாக தங்களைக் கருதிக்கொண்ட போதிலும், தொடக்க காலத்தில் அவர்கள் வன்னி, யாழ்ப்பாணம், மற்றும் தமிழகத்திலுள்ள தமிழர்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். குறிப்பாக ஒல்லாந்தர் காலத்திலிருந்து தஞ்சைநாயக்க மன்னர்களுடனும் மற்றைய தமிழகக் குறு நில மன்னர்களுடனும் அவர்களுக்கிருந்த தொடர்பு ஆங்கிலேயருக்கு ஆபத்தான ஒன்றாகவே இருந்தது.

இந்திய பெருநிலப்பரப்பை காவல் காக்கும் இராணுவக் கேந்திர நிலையமாக இலங்கையை வைத்திருக்க அவர்கள் விரும்பினார்கள். விமானப் படை அறியப்பட்டிராத அக்காலத்தில் 'கடலை ஆள்பவனே, தரையை ஆள்வான்' என்ற கொள்கை முக்கியத்துவம் பெற்றிருந்த அக் காலத்தில் திருகோணமலைத்துறைமுகம் ஆங்கிலேயருக்கு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. எனவே, இலங்கையை இந்தியாவுடன் ஒன்றாக இணைப்பதால் ஏற்படக்கூடிய நிர்வாகச் சிக்கனத்தால் வரக்கூடிய இலாபத்தை விட இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நிரந்தரப் பிரிவை உண்டாக்கி இலங்கையில் பிரித்தானிய நிர்வாகத்தைப் பலப்படுத்தி அதன் கீழ் இந்தியாவைக் கட்டுப்படுத்தவென தனியான கடற்படை பலத்தை வைத்திருப்பது அதிமுக்கியமானது என்றே அவர்கள் நினைத்தார்கள்.

யாழ்ப்பாணத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழகத் தொடர்பை பெற்றுத் தங்களுக்கு எதிராக கிளர்ந்தெழமாட்டார்கள் என்ற நம்பிக்கை ஆங்கிலேயருக்கு இருந்தது. சேர் பட்டங்களை வழங்குவதன் மூலமும் அரச பதவிகளை வழங்குவதன் மூலமும் அவர்களை விலைக்கு வாங்கி விடலாம் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் பண்டார வன்னியனின் வாரிசுகளுடனும், தமிழகத்து குறு நில மன்னர்களுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த கண்டியச் சிங்களவர்களே அவர்களுக்கு பிரச்சினைக்குரியவர்களாக இருந்தார்கள். கரையோரச் சிங்களவர்களது நிலையும், ஏறக்குறைய யாழ்ப்பாணத்தவர்களது நிலைதான் என்பதால் அவர்களையிட்டும் ஆங்கிலேயர்கள் அவ்வளவு பெரிதாக கவனமெடுக்கவில்லை.

எனவே பிரித்தாளும் தந்திரத்தைக்கையாண்டு கண்டியச் சிங்களவர்களையும், கரையோரச் சிங்களவர்களையும் ஒன்றுசேர விடாதபடி தடுக்கும் அதே நேரத்தில் கண்டியச் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இருந்த தொடர்பை முற்றாகத் துண்டித்து அவர்கள் ஒரு போதும் ஒன்றிணையாது பார்த்துக் கொள்ளும் நடவடிக்கையையும் மேற்கொள்ள அவர்கள் தீர்மானித்தனர்.

அதற்கு அப்போதிருந்த கண்டிய நில்பிரபுத்துவ முறை சட்டங்கள் அவர்களுக்கு வசதியாக இருந்தன. ஒல்லாந்தர் கட்சிக்குக் கீழிருந்த யாழ்ப்பாணத்திலும் மற்றும் கரையோரச் சிங்களப் பகுதிகளிலும் நிலம் தொடர்பான சட்ட அமைப்பு ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டிருந்தது. நில உரிமையைப் பெற்றிருந்த மக்களுக்கு அதை உறுதிப்படுத்த உறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் கண்டியில் நிலம் மன்னனுக்கும் அவனது பிரதானிகளுக்கும் மட்டுமே சொந்தமாக இருந்தது. (யாழ்ப்பாணத்திலும் இதே நிலை முன்பு இருந்த போதிலும் போர்த்துக்கேயர் ஆட்சியின் பிற்காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் அவை படிப்படியாக மக்களுக்கு விற்கப்பட்டு விட்டன.)

மன்னன் தனது நிலத்தை தனது பிரதானிகள் மூலம் விவசாயிகளுக்கு குத்தகைக்கு விட்டிருந்தான். இவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டதற்கான எழுத்து மூலப் பத்திரம் எதுவும் கிடையாது. பரம்பரை பரம்பரையான நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்தக் குத்தகை முறை தொடர்ந்தது.

கண்டிய ஆட்சி பிரித்தானியர் கைக்கு வந்தபோது கண்டிய மன்னனுக்குரிய நிலமும் பிரித்தானியர் வசமாகியது. அவர்கள் பழைய குத்தகை முறையைத் தொடர்வதற்குப் பதிலாக 1840-ல் 'தரிசு நிலச் சட்டம்' ஒன்றை அறிவித்ததன் மூலம் உரிமை நிரூபிக்கப்படாத அனைத்து நிலத்தையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். இந்த நடவடிக்கையில் யாராலும் பயன்படுத்தப்படாமல் இருந்த காடுகள் மட்டுமல்லாமல் கண்டியும் அதைச் சூழ உள்ள பகுதியிலுமிருந்த விவசாய நிலங்கள் கூட ஆங்கிலேயர் வசமாகின. அந்த நிலங்களில் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவந்த சிங்கள விவசாயிகளுக்கு தங்களது குத்தகை உரிமையை நிரூபிக்க எந்த ஆவணமும் இருக்கவில்லை. வசதி படைத்த கண்டிய நிலப்பிரபுக்கள் மட்டும் தங்கள் மன்னனிடமிருந்து பெற்ற ஆவணங்களை சமர்ப்பித்து தங்களது நில உரிமையை நிரூபிக்க முடிந்தது.

- நக்கீரன்

படிப்பகம்